සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**

සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
**MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE**

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>**எனது இல** DDD/HO/MF/BR<br>**My No** | ඔබේ අංකය<br>**உமது இல** .............................................<br>**Your No** | දිනය<br>**திகதி** **2017.05.22**<br>**Date** |

சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் மற்றும் வங்கிச் சங்க முகாமையாளர்களுக்கும்.

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை பதிவு செய்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 2017/03/17 ம் திகதிய ச.ச.வ 2017/06 இலக்க சுற்றுநிருப ஆலோசனைக்கு அமைவாக

குறித்த கடிதத்தினூடாக சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை பதிவு செய்வதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களை பதிவு செய்வதற்கான பதிவுக் கட்டணத்தை அனுப்பும் போது கீழ் குறிப்பிடப்படுமாறு காசோலைகளை வரைந்து சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவிற்கு அனுப்பி வைக்கவும் அதன் கணக்குப் பதிவுகள் மற்றும் குறியீட்டு இலக்கம் என்பன 2017/06 இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமையாளர், இலங்கை வங்கி பத்தரமுல்லை. திவிநெகும அபிவிருத்தி திணைக்களம் சமுதாய அடிப்படை வங்கிப் பிரிவு முதலீட்டுக் கணக்கு இல **3417925.**

( Manager BOC Battaramulla, Department of Divineguma Development Investment A/C – 3417925)

மேலும் குறித்த சுற்றுநிருப ஆலோசனைகளின் பிரகாரம் சமுதாய அடிப்படை வங்கிகள் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் இருந்து பங்குகளை கொள்வனவு செய்யும் போது கீழ் குறிப்பிடப்படுமாறு கணக்குகளை ஆரம்பித்து உரிய கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பற்று – பங்குக் கணக்கு – சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் ( வங்கி மட்டத்தில் குறியீட்டு இலக்கம் - 3006)
வரவு – பங்கு மூலதனக் கணக்கு (வங்கிச் சங்க மட்டத்தில் குறியீட்டு இலக்கம் 9002)

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம் இப் பங்கு கொள்வனவுக்குரிய கடிதத்தினை வங்கிக்கு வழங்க வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் தொடர்பான விபரங்களை பதிவு செய்வதற்கான பேரேட்டினையும் பாவித்தல் வேண்டும்.

**<u>சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்களின் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் நிறைவேற்றுச் சபை அங்கத்தவர்கள் பதவி விலகுதலும் புதியவர்களை நியமித்தலும்</u>**

சமுதாய அடிப்படை வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர் ஒருவர் எழுத்து மூலம் தாம் பதவி விலகிக் கொள்வதாக முகாமையாளருக்கு அறிவிக்கும் பட்சத்தில் அங்கு வெற்றிடம் ஏற்படும் பதவிக்கு பதவி விலகிக் கொண்ட உறுப்பினரை பிரதிநிதித்துவப்படுத்திய கிராம சேவகர் பிரிவில் இருந்து வங்கிப் பொதுச்சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில்

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya ,Battaramulla**

අධ්‍ය ක්ෂ ජනරාල්
பணிப்பாளர் தலைமையதிபதி
Director General
Tel- 011-2873802/2872202
Fax - 011-2889002
E-mail-dg@divineguma.gov.lk

අධ්‍යාක්ෂ(මානව සම්පත්)
பணிப்பாளர் ( மனிதவளம்)
Director (Human Resource)
011-2873799
011-2873996
diradmin@divineguma.gov.lk
**Hot Line : 0112-889007**

ප්‍ර ධාන ගණකාධිකාරී
பிரதான கணக்காளர்
Chief Accountant
011-2869742
011-2869742
finance@divineguma.gov.lk

අධ්‍යක්ෂ(ක්ෂුද්‍ර මූල්‍ය)
பணிப்பாளர் (குறு நிதி )
Director ( Micro Finance)
011-2889003
011-2887469
**Hot Line:0112-885582**

කාර්යාලය
அலுவலகம்
Office
011-2887280
**Hot Line: 011- 2887722**

(10 பேரில்) இருந்து ஒருவரை பெரும்பாண்மையினரின் விருப்பத்திற்கு அமைய தெரிவு செய்தல் வேண்டும்.

சமுதாய அடிப்படை வங்கிச் சங்க நிறைவேற்றுச் சபை உறுப்பினர் ஒருவர் வங்கிச் சங்க முகாமையாளருக்கு எழுத்து மூலம் தாம் பதவி விலகுவதாக அறிவிக்க முடியும். அவ்வாறு பதவி விலகும் சந்தர்ப்பத்தில் அவர் சமுதாய அடிப்படை வங்கியின் கட்டுப்பாட்டுச் சபையின் உறுப்பினர் பதவியில் இருந்தும் விலகிக் கொள்வதாக கருதப்படும். அதன் பிரகாரம் அவ் வெற்றிடத்திற்கு வங்கியின் கட்டுப்பாட்டுச் சபைக்கு நியமிக்கப்படும் புதிய அங்கத்தவர் வங்கிச் சங்கத்தின் நிறைவேற்று சபைக்கும் நியமிக்கப்படல் வேண்டும். வங்கியின் கட்டுப்பாட்டுச் சபையின் அங்கத்தவர் ஒருவரை பிரதிநிதித்துவப்படுத்தும் சமுதாய அடிப்படை அமைப்பு அவரது அங்கத்துவத்தினை ஏதும் காரணங்களால் ரத்துச் செய்யும் போது அத் திகதியில் இருந்து கட்டுப்பாட்டுச் சபையின் அங்கத்துவம் ரத்துச் செய்யப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

சமுதாய அடிப்படை வங்கியின் அதிகாரப் பிரதேசத்தின் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கை 15 இனை விட அதிகமாக காணப்படினும் கட்டுப்பாட்டுச் சபைக்கு நியமிக்கப்படும் உயர்ந்த பட்ச தொகை 15 தே ஆகும் என்பதுடன் தற்போது வழங்கப்படும் கட்டுப்பாட்டுச் சபை கொடுப்பனவு அல்லது நிறைவேற்றுச் சபைகளுக்கான கொடுப்பனவில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

சமுதாய அடிப்படை அமைப்புக்கள் வங்கிக் கடன்களை சிபாரிசு செய்யும் போது சமுதாய அடிப்படை அமைப்பின் பொதுச்சபையின் முன் அங்கீகாரத்தின் கீழ் நிறைவேற்றுச் சபைக்கு கடன்களை சிபார்சு செய்ய வேண்டும். என்பதுடன் தலைவர் அல்லது செயலாளர் உரிய கடன் விண்ணப்பப் படிவத்தில் சிபார்சு செய்தமைக்கு ஒப்பமிட முடியும். எவ்வாறு இருப்பினும் விசேட காரணங்களின் பொருட்டு முகாமையாளர் ஏதேனும் கடன் விண்ணப்பபடிவங்களை சமுதய அடிப்படை அமைப்பின் பொதுச்சபைக்கு முன் வைத்து நேரடியாக அதற்கான அனுமதியினையும் பெற்றுக் கொள்ள முடியும்.

சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தினை பதிவு செய்வதற்குரிய விடயங்கள் தொடர்பாக மேலும் விபரங்கள் தேவை எனின் 011-3054528 அல்லது 011-2887469 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகின்றேன்.

கே.கே.எல்.சந்திரதிலக்க
பணிப்பாளர் (குறுநிதி)
பணிப்பாளர் நாயகத்தின் பொருட்டு

**பிரதி**

1. சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்களுக்கும் - தகவலுக்காக
2. சகல பிரதேச செயலாளர்களுக்கும் - தகவலுக்காக
3. பிரதம உள்ளக கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காக

TRANSLATED BY – I.ALIYAR